[2012 நவம்பர் 1

கள்ளக்குறிச்சியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. கூகையூர், எஸ். ஒகையூர், நாகலூர் ஆகிய இடங்களில் புதிதாக மாணவ/மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) கைப்பேசிகளை புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு உறுப்பினர்கள் அவைக்குள் வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கைப்பேசிகளை அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு வரவும். இன்று கைப்பேசியின் ஒலி கேட்டது. அவை இனி பறிமுதல் செய்யப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் சேர்ந்து நின்று கொண்டு பேசினால் என்ன கேட்க முடியும்? உட்காருங்கள், யாராவது ஒருவர் பேசினால் என்ன பேசுகிறீர்கள் என்று கேட்கலாம். இப்படி அனைவரும் எழுந்து நின்று பேசினால், என்ன கேட்க முடியும். அனைவரும் உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசினால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள், உட்காருங்கள். ஏற்கெனவே இந்த அவையினுடைய மரபு ஒத்திவைப்புத் தீர்மானமாக எதையும் எடுத்துக்கொள்வது இல்லை. உங்கள் ஆட்சி நடந்தபோதுகூட எதையும் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்கவில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானமாகத்தான் அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்வதற்கு எனக்கு நேரமில்லை. அலுவல்கள் நிறைய இருக்கின்றன. நான் அனுமதி மறுக்கிறேன். அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் விருப்பம்போல் பேசினால் எதுவும் பதிவாகாது. தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். அவைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) Adjournment motion, நான் அனுமதி அளித்தால்தான் பேச முடியும். (குறுக்கீடு) நான் அனுமதித்தால் உண்டு. தற்போது நான் உங்களை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொல்லும்போது என்னால் எடுக்க முடியாது, நான் அனுமதிக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நின்று கொண்டிருக்கிறேன். எனவே, நீங்கள் சென்று அனைவரும் உங்கள் இருக்கையில் உட்காருங்கள். நான் நின்று கொண்டு பேசுகிறேன், ஆனால் நீங்கள் கூட்டமாக இங்கு வந்து பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. தொடர்ந்து அவையில் குழப்பம் விளைவிக்கிறீர்கள். நேற்றும் இதுபோல்தான் நடந்துகொண்டீர்கள். இன்றும் இதுபோல் நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நல்ல முறையில் அவை நடப்பதற்கு ஒத்துழைக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் மீண்டும் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். உட்காரவில்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இருக்கைக்குப் போய்ப் பேசுங்கள். இருக்கைக்குப் போங்கள். இவ்வளவு சொன்னதற்குப் பின்னாலேயும், (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு விளக்கம் சொன்னதற்குப் பின்னாலேயும் தி.மு.க. உறுப்பினர்கள் வேண்டுமென்றே குழப்பம் செய்ய வந்திருப்பதால் அவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

சீக்கிரம் வெளியேற்றுங்கள். மற்ற அலுவல்கள் நடக்க வேண்டும், (குறுக்கீடுகள்) நான் மற்ற அலுவல்களை எடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) சத்தம் போடாமல் போங்கள். காவலர்கள், லாபியில் கோஷம் போடுபவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.)

முற்பகல் 11-05

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(குறுக்கீடுகள்) உட்காருங்கள். காலையிலே உங்களிடம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அனுமதி இல்லை. இன்று காலையில்தான் நீங்கள் கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் கிடைத்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து இப்போதுதான் கொடுத்தார். காலையிலேயே அவரிடம் இதுகுறித்து சொல்லிவிட்டேன்.* Department-*க்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். நீங்கள் ஒத்துழையுங்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் சொல்லிவிட்டேனே!*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் உட்காரவும். பேரவை முன்னவர் பேசுகிறார். உட்காருங்கள்.*